மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தற்சமயம் இல்லை.

திரு. ரா. ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாரணபுரம் முதல் தேசம்பட்டி வரை சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் 10 ஆண்டு காலமாக மிக மோசமாக, பஸ் போக்குவரத்து சரியாகப் போக முடியாத சூழ்நிலை இருக்கின்றது. என்னுடைய ஊருக்கு அருகில் அந்தச் சாலை இருக்கிறது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்த 3 கிலோ மீட்டர் தூரத்தைப் புதுப்பித்துத் தர ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை, திருநெல்வேலி கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள திருமலாபுரம் மங்கம்மாள் சாலை - கிலோ மீட்டர் 0/0, 2/2 என்ற ஓர் இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையைச் செப்பனிட, தோராயமாக ரூபாய் 12 இலட்சம் தேவைப்படும். இப்பணி, அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இருப்பினும், அடுத்து எடுக்கவிருக்கின்ற சாலை மேம்பாட்டுப் பணியில், இச்சாலையைப் புதுப்பிக்க முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 201, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

201—

உயர்நிலைப் பள்ளியாக்குதல்

***7640—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2002 ஏப்ரல் 23]

(அ) தாம்பரம் நகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குவதற்கு இதுவரை கருத்துரு ஏதும் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், குறிப்பாக மேற்குத் தாம்பரத்தில், பழைய தாம்பரத்தில் இருக்கிற பள்ளியைப் பற்றிக் கேட்டிருந்தேன். அந்தப் பள்ளியிலே சற்றொப்ப 350 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் படிக்கின்றார்கள். அந்தப் பள்ளியிலே 1 ஏக்கருக்கு மேற்பட்ட இடம் இருக்கிறது. சுற்றுச்சுவர் எல்லாம் இருக்கிறது. உயர்நிலைப் பள்ளி ஆக்குவதற்குரிய வாய்ப்புகள் அத்தனையும் இருக்கிற காரணத்தினால், உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கான இட வசதியும் இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் இந்த ஆண்டு ஏற்பாடு செய்தால், அதற்குரிய 1 இலட்சம் ரூபாய் பணத்தைக்கூடச் செலுத்துவதற்கு அங்கிருக்கிற பொது மக்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்வாரா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்தில் 4 நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. கண்ணடியாபுரத்திலுள்ள நடுநிலைப் பள்ளியில் 1½ ஏக்கர் நிலம் மட்டும்தான் இருக்கிறது. அங்கு மாணவர்கள், 6, 7, 8 ஆகிய 3 வகுப்புகளில் படிக்கின்றவர்கள் 115 பேர்தான் இருக்கின்றார்கள். 8 ஆம் வகுப்பில் படிக்கின்றவர்கள் 38 பேர் இருக்கின்றார்கள். அடுத்ததாக, பழைய தாம்பரம் நகராட்சி நடுநிலைப் பள்ளியை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், அதற்குத் தற்போது 4 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆனால், தேவைப்படுவது 5 ஏக்கர் நிலம். நடுநிலைப் பள்ளியில் 6, 7, 8 ஆகிய 3 வகுப்புகளில் 110 மாணவர்கள் படிக்கின்றார்கள். அதில் 8 ஆம் வகுப்பில் 25 மாணவர்கள்தான் படிக்கின்றார்கள். அதேபோல், வினோபா நகரில் 1/2 ஏக்கர் நிலத்தில்தான் அந்தப் பள்ளி இருக்கிறது.

அதிலும் பார்ப்பீர்கள் என்றால், 6, 7, 8 ஆகிய வகுப்புகளில் 82 மாணவர்கள்தான் படிக்கின்றார்கள். 8 ஆம் வகுப்பில் 28 பேர்தான் படிக்கின்றார்கள். இரும்புலியூரில் ¾ ஏக்கர் நிலத்தில்தான் அந்தப் பள்ளி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலும் பார்ப்பீர்கள் என்றால், 143 மாணவர்கள் படிக்கின்றார்கள்; 8 ஆம் வகுப்பில் 45 மாணவர்கள் படிக்கின்றார்கள். ஆகவே, உயர்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் என்றால் அதற்கு 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதற்கேற்ப நிலத்தை ஏற்பாடு செய்ய வேண்டும். பிறகு, மாணவர்கள் எண்ணிக்கை குறைந்தபட்சம் 50 ஆவது இருக்க வேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. அதுவும் சரி செய்யப்படவில்லை. கட்டடங்களைப் பார்த்தால்கூட, தேவையான கட்டடங்கள் முழுவதும் இல்லை. அதைச் செய்ய வேண்டும் என்றால், எம்.எல்.ஏ. நிதியிலிருந்து நீங்கள் தரலாம். மற்றவர்களும் செய்து கொடுக்கலாம். அதோடு, ஒரு பள்ளியைக் கட்ட வேண்டும், அது தரம் உயர்த்தப்பட வேண்டும் என்றால், பொது மக்களுடைய வைப்புத் தொகையாக 1 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும். இந்த 4 பள்ளிகளில் யாரும் இதுவரை ஒன்றும் கட்டவில்லை. 1 இலட்சம் ரூபாய் பணத்தைக் கட்டியவர்களே பல பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நகராட்சிப் பள்ளியிலே இருப்பவர்கள் இந்தக் குறைபாடுகளையெல்லாம் பூர்த்தி செய்தார்கள் என்றால், அதைப்பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மீ.அ. வைதியலிங்கம்.

முற்பகல் 10-05

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுட்டிக்காட்டிய கேள்வி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பழைய தாம்பரத்தில் 110 மாணவர்கள் 6, 7, 8 ஆம் வகுப்புகளிலே படிக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டிய அந்தப் பள்ளியைப் பற்றித்தான். அதற்கு 4 ஏக்கர் இடம் இருக்கிறது. நகரப் பகுதியிலே 5 ஏக்கர் கிடைப்பது என்பது எவ்வளவு சிரமம் என்பது மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியும். பல இடங்களிலே ஒரு ஏக்கர் இடத்திலேகூட உயர்நிலைப் பள்ளிகள் நடைபெறுகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதியைத் தளர்த்தி 4 ஏக்கர் இடத்திலே ஒப்புக்கொள்வதாக இருந்தால், அதற்குரிய 1 இலட்சம் ரூபாயைச் செலுத்துவதற்கு அங்கே இருக்கிற பொது மக்கள் தயாராக இருக்கிறார்கள். அங்கேயெல்லாம் படிக்கிறவர்கள் நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த பிள்ளைகள், ஏழையெளிய மக்களுடைய பிள்ளைகளாக இருக்கிற

2002 ஏப்ரல் 23]

காரணத்தால், அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டத்தைத் தளர்த்தி, 4 ஏக்கர் போதும் என்று உத்தரவிடுவாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சட்டத்தைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். இதற்கென்று ஓர் உயர்மட்டக் குழு இருக்கிறது. அந்தப் பகுதி மக்களும் சேர்ந்து, அந்தக் கோரிக்கையை உயர்மட்டக் குழுவினிடத்திலே தாருங்கள். அவர்கள் என்ன முடிவெடுக்கிறார்களோ, அதற்கேற்றாற்போல் அரசானது தன் முடிவைச் செயல்படுத்தும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 202, திரு. ஆஸ்டின், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

202—

வழக்குரைஞர் நல நிதி

***3513—திரு. ஆஸ்டின்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வழக்கறிஞர்கள் இறந்துவிட்டால் வழக்குரைஞர் நல நிதியில் இருந்து வழங்கப்படும் தொகையான இரண்டு இலட்சத்தை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பங்களிலிருந்துதான் பல பேர் சட்டக் கல்லூரியிலே படித்து வழக்கறிஞர்களாகப் பொறுப்பேற்கின்றார்கள். அப்படி அவர்கள் வழக்கறிஞர்களாகப் பணியைத் தொடங்குகின்ற காலத்திலே .அவர்களுக்கு மாதந்தோறும் ஒரு நிரந்தரமான வருமானம் இல்லாத நிலைதான்